


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | மே 03, 2018 | புரட்சி 17 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00


## சென்னையில் கழக மாநாட்டின் எழுச்சி

# “தன்னுரிமை கிளர்ச்சிக்குத் தயாராவோம்!”



பெரியாரிய களப் போராளி பத்ரிநாராயணன் படுகொலை செய்யப்பட்ட ஏப்.30ஆம் நாளில் தன்மான தன்னுரிமை மீட்பு மாநாட்டை ‘நிலம் பாழ் - நீர் மறுப்பு - நீட் திணிப்பு’ என்ற தலைப்பில் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் மண்டல மாநாடாக இராயப்பேட்டை வி.எம். சாலையில் எழுச்சியுடன் நடத்தியது. ஏப்.30, 2018 காலை பத்ரி அடக்கம் செய்யப்பட்ட அவரது நினைவிடத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், நூற்றுக்கணக்கான தோழர்களுடன் மலர்வளையம் வைத்து உறுதி மொழி ஏற்று வீரவணக்கம் செலுத்தினர்.

தோழர்கள் எடுத்த உறுதி மொழி:

“பெரியார் இலட்சியப் பணியில் உயிர்ப் பலியாகிய பத்ரியின் நினைவு நாள் எங்களின் கொள்கை உணர்வுகளை புதுப்பிக்கும் நாள்.

கொள்கைத் தோழன் பத்ரியே... இராயப்பேட்டை பகுதியில் நீ பெரியாரின் கொள்கையை வலிமையாகப் பரப்பினாய்; திசை மாறி குழம்பி நின்ற இளைஞர்களை இயக்கமாக்கி நல்வழிப்படுத்தினாய்; தோழர்களின் சுகதுக்கங்களில் பங்கேற்று அரவணைத்தாய்; இயக்கத்தில் பதவி என்பது அதிகாரம் அல்ல; தொண்டு; தோழர்களை அரவணைத்துக் கொள்கைகளை முன்னெடுப்பதே பதவி என்பதை செயலில் உயர்த்தினாய்; தன்னை முன்னிலைப் படுத்தாது கொள்கையை முன்னிறுத்தும் பண்புடன் வாழ்ந்து காட்டினாய்; நீ உருவாக்கி வளர்த்த பெரியார் இயக்கப் பணிகளை மேலும் உற்சாகத்துடனும் உறுதியுடனும் வளர்த்தெடுக்க உன் நினைவு நாளில் உறுதி ஏற்கிறோம்!

எங்கள் பத்ரிக்கு வீரவணக்கம்! பெரியார் வாழ்க! பெரியாரியம் வெல்க!” - என்ற உறுதிமொழியை ஏற்றனர்.

இந்நிகழ்வில் பத்ரியின் துணைவியார், அவரது தாயார், அவரது மகள் யாழினி, மகன் மஜீத் (பெரியார் நடத்திய சட்ட எரிப்புப் போராட்டத்தில் பங்கேற்று உயிர்நீத்த மஜீத் நினைவாக - மகனுக்கு பத்ரி சூட்டிய பெயர்). பத்ரியின் மூத்த சகோதரிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள், தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ், தே.மு.க., த.பெ.தி.க. உள்ளிட்ட கட்சிகளின் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். இவர்கள் பத்ரி மீது மிகவும் மரியாதையும் நட்பும் பாராட்டிய தோழர்கள். தோழர்கள் அனைவருக்கும் கழக அலுவலகத்தில் காலை உணவு வழங்கப்பட்டது.

### எழுச்சி மாநாடு

மாலை 6 மணியளவில் இராயப்பேட்டை வி.எம். சாலை சந்திப்பில் மாநாடு, ‘மக்கள் மன்ற’த்தின் பறை இசையோடு தொடங்கியது. தென்சென்னை மாவட்டக் கழகத் தலைவர் வேழவேந்தன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, தொடக்க உரையில், போராளி பத்ரிநாராயணன், இராயப்பேட்டை பகுதியில் பெரியார் இயக்கத்தை வளர்த்தெடுத்த அணுகுமுறை; ஜாதி எதிர்ப்புக் கொள்கையில் காட்டிய உறுதி; கழகத் தோழர்களை அரவணைத்து அவர்களைக் களப்பணியாளர்களாக்கியது; இராயப்பேட்டைப் பகுதியில் ரவுடிகளின் அட்டகாசத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது; மக்களோடு மக்களாக இணைந்து நின்று உதவிக்கரம் நீட்டிய பண்புகளை உணர்ச்சியுடன் விவரித்தார். “போராட்டத்தில் சிறை செல்வதற்கு இப்பகுதி இளைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்பார்கள்; பலர் பள்ளிக்கூடம் போக ஆர்வம் காட்டாதவர்கள்; ஆனால் சிறைக்குப் போவதற்கு ஆர்வம் காட்டியவர்கள். பத்ரியின் களப் பணி அவர்களை அந்த அளவு ஈர்த்தது” என்று குறிப்பிட்டார். தொடர்ந்து தலைமைக் குழு உறுப்பினர் அன்பு. தனசேகரன், பா.ஜ.க. ஆட்சியின் துரோகங்களை உணர்ச்சிபூர்வமாகப் பேசினார்.

‘மக்கள் மன்ற’ கலை நிகழ்ச்சிகளுக்கிடையில் உரை, மீண்டும் கலை நிகழ்வு என்று நிகழ்ச்சிகள் நடந்தன. முதல் உரையாக, ‘நிலம் பாழ்’ என்ற தலைப்பில், மீத்தேன், ஷேல்மீத்தேன், ஹைடிரோ கார்பன் போன்ற நிலத்தை நஞ்சாக்கி மக்களின் வாழ்வுரிமையை அழிக்கும் திட்டங்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வரும் பேராசிரியர் ஜெயராமன், ‘நிலம் பாழ்’ என்ற தலைப்பில் 45 நிமிடம் விரிவான உரையாற்றினார். காவிரி பாசனப் பகுதியில் பூமியைக் குடைந்து எடுக்கப்படும் இத் திட்டங்கள், மக்களின் விவசாயம், அவர்கள் உடல்நலன்களை எவ்வளவு மோசமாகப் பாதித்து வருகிறது என்பதை விரிவாகப் பட்டியலிட்டார். காவிரி மேலாண்மை வாரியத்தை ‘இராம ராஜ்யம்’ அமைக்கத் துடிக்கும் ஆரிய இந்துத்துவ சக்திகள் ஒருபோதும் அமைக்க மாட்டார்கள். தன்னுரிமைக்கான போராட்டத்துக்கு நாம் தயாராக வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார்.








தொடர்ந்து, பத்ரியோடு ஏற்கனவே பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்து பணியாற்றிய சுமார் 30 தோழர்களும், சட்டக் கல்லூரி மாணவர் மாணவியர்களும், த.பெ.தி.க. மண்டல அமைப்பாளர் கரு. அண்ணாமலை தலைமையில் கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர் முன்னிலையில் மீண்டும் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

### பத்ரி ‘நினைவுச் சுவடுகள்’ நூல் வெளியீடு

தொடர்ந்து சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகக் களப் போராளி பத்ரியோடு இணைந்து பணியாற்றியவர்களின் நினைவுக் கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை “தோழர்களை இயக்கமாக்கியவன்; பெரியாரிய களப் போராளி தோழர் பத்ரியின் நினைவுச் சுவடுகள்” என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. சென்னை மாவட்ட தி.வி.க. இந்நூலை தயாரித்துள்ளது. இந்நூலில் கொளத்தூர் மணி, ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் சாரநாத், முரளி (இராயப்பேட்டை பகுதியில் தேனீர்க் கடை நடத்தும் தோழர்), அன்பு தனசேகர், விடுதலை இராசேந்திரன், இரா. உமாபதி, தபசி. குமரன் மற்றும் பத்ரியோடு இணைந்து நின்ற க.பிரகாசு, ஆ.தமிழ்ச்செல்வன், ஜேம்ஸ் ஆகியோர் பத்ரியின் களப்பணிகளையும், பண்புகளையும் கட்டுரைகளாகப் பதிவு செய்துள்ளனர்.

நூலை தந்தை பெரியார் திராவிடர் கழகத்

(4ஆம் பக்கம்)

# சென்னையில் கழக மாநாடு எச்சரிக்கை

# காவிரிப் பாசனப் பகுதியிலிருந்து இராணுவத்தை வெளியேற்று!

சென்னையில் 30.04.2018இல் நடந்த திராவிடர் விடுதலைக் கழக தன்மானம் - தன்னுரிமை மீட்பு மண்டல மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

**இராணுவமயமாக்காதே! -** காவேரி பாசனப் பகுதியை வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்ற உழைக்கும் மக்களின் கோரிக்கையைப் புறந்தள்ளி, பாசனப் பகுதியை நஞ்சாக்கும் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் போன்ற திட்டங்களைத் திணித்து வருகிறது நடுவண் ஆட்சி; மக்கள் வாழ்வுரிமைக்கான போராட்டத்தை துணிவுடன் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் தொடர்ந்து நடத்தி வரும் நிலையில் நடுவண் ஆட்சி - போராடும் மக்களை மிரட்டவும் - ஒடுக்கவும் துணை இராணுவப் படையை இறக்கி காவிரி பாசனப் பகுதியை இராணுவ மயமாக்கி வருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது; இராணுவத்தைக் கொண்டு மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை நசுக்க முயன்றால் அது மக்கள் புரட்சியாக வெடிக்கும் என்று இம்மாநாடு எச்சரிக்கிறது.

**தமிழகக் கல்வி உரிமையில் குறுக்கிடாதே! :** கிராமப்புற மாணவர்களின் மருத்துவப்படிப்பை முடக்கும் 'நீட்' தேர்விலிருந்து தமிழகத்துக்கு விதிவிலக்கு தரவேண்டும் என்ற தமிழக சட்ட மன்றத்தின் ஒருமித்த தீர்மானத்தைக் குப்பைக் கூடையில் வீசி எறிந்து விட்டது நடுவண்ஆட்சி; கடந்த ஆண்டு நீட் தேர்வால் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்து படிக்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை கடுமையாக சரிந்துவிட்டது; இப்போது மேலும் ஒரு அடி விழுந்திருக்கிறது; கிராமப்புறங்களில் மருத்துவ சேவை செய்யும் அரசு மருத்துவர்களுக்கு மேல்பட்டப் படிப்புகளில் டிப்ளோமோ வகுப்பில் 50 சதவித இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட முறையும் நீக்கம் செய்யப்பட்டு விட்டது; அத்துடன் இனி மருத்துவ பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கான இறுதியாண்டு தேர்வு அகில இந்திய தேர்வாக நடக்கும் என்று தேசிய மருத்துவ ஆணையம் கூறுகிறது; இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மருத்துவக் கல்லூரிகள் அதிகம்; காமராசர் காலத்திலிருந்து தொடர்ந்து - பின்பற்றப்பட்டு வந்த சமூக நீதிக்கல்வியில் தமிழ்நாடு மருத்துவத்துறையில் இந்தியாவிலேயே முதலிடத்தில் நிற்கிறது; இந்த சமூக நீதியையும் கிராமப்புற மருத்துவ சேவையையும் முற்றாக சீர்குலைக்கும் அதிரடி நடவடிக்கைகளை நடுவண் அரசு தொடர்ந்து மேற்கொண்டு தமிழ்நாட்டு மக்கள் மீது போர்தொடுத்து வருவதை தமிழக மக்கள் இனியும் சகிக்க மாட்டார்கள் ; தமிழக கல்வி உரிமையிலிருந்து நடுவண் அரசு ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாட்டு மக்களின் உரிமை சார்ந்த உணர்வுகளோடு விளையாட வேண்டாம் என்றும் இம்மாநாடு நடுவண்அரசை எச்சரிக்கிறது.

**வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை உறுதி செய்! :** தலித் மக்களின் பாதுகாப்புக் கவசமாக நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை உச்ச நீதிமன்றம் நீர்த்துப்போகச் செய்தது உச்சநீதிமன்றத்தின் வரம்பு மீறியச் செயலாகும்; இந்தச் சட்டம் முறையாக செயல்படுத்தப்படாமல் இருப்பதுதான் உண்மை நிலையாகும்; சட்டத்தில் குற்றம் சாட்டப் பட்டவர்கள் அதிக அளவில் விடுவிக்கப்படுவதற்குக் காரணம் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகார வர்க்கத்தின் அலட்சியமே தவிர சட்டத்தின் தோல்வி அல்ல; எனவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நிராகரிக்கும் சட்டப்பாதுகாப்புகளை உறுதி செய்ய நடுவண் ஆட்சி முன்வரவேண்டும்; அதற்கு அனைத்துக் கட்சியினரும் ஆதரவு தரவேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**15ஆவது நிதிக் குழுவின் அநீதி :** 15ஆவது நிதிக்குழு மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்காக உருவாக்கியுள்ள புதிய கோட்பாடுகள் வடமாநிலங்களை விட வளர்ச்சியடைந்த தமிழ்நாடு உள்ளிட்ட தென்னக மாநிலங்களுக்கு கடும் பாதிப்புகளை உருவாக்குவதாகும். வளர்ச்சி பெற்ற மாநிலங்கள் என்பதற்காகவே தண்டிக்கப்படு கின்றனர்; இந்த அநீதியை எதிர்த்து தென்னக மாநிலங்களின் ஒருமித்த வலிமையான கண்டனத்தைத் தெரிவிக்க கேரள நிதியமைச்சர் தென்னக நிதி அமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டினார்; இந்த மாநாட்டில் நடுவண் அரசுக்கு அஞ்சி நடுங்கி தமிழக நிதியமைச்சர் பங்கேற்க வில்லை; இது தமிழ்நாட்டு மக்களுக்கு இழைத்த துரோகம்; ஆட்சி அதிகாரத்துக்காக தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை நடுவண் பா.ஜ.க பார்ப்பனிய ஆட்சியிடம் அடகு வைக்கும் தமிழக 'சரணாகதி' ஆட்சியை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

**'வடநாட்டு அதிகாரிகளே; வெளியேறு!' -** தமிழ்நாட்டில் மத்திய அரசு அலுவலகங்களில் தேசியமய வங்கிகளில் வடநாட்டுக்காரர்கள் ஏராளமாக குவிந்துவிடுகிறார்கள்; தமிழ் மொழியே அறிந்திடாத தமிழ்நாட்டுக் கலாச்சாரத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாத வடமாநில அதிகாரிகள் தமிழ்மக்களின் வேலை வாய்ப்பு உரிமைகளைப் பறித்து குறுக்கு வழியில் பதவிகளைப் பிடித்துவரும் முறைகேடுகள் அவ்வப்போது அம்பலமாகி வருகின்றன; இந்நிலையில் "வடநாட்டு அதிகாரிகளே, வெளியேறுங்கள்" என்ற இயக்கத்தைத் தொடங்க தமிழர்கள் தயாராகுமாறு, இம்மாநாடு அறைகூவல் விடுக்கிறது.

**சேகர் - ராஜாவை கைது செய்க :** தமிழ்நாட்டு பெண் ஊடகவியலாளர்களின் சுயமரியாதையை அவமதித்து அவர்களை இழிவு செய்து முகநூல் பதிவிட்ட நடிகர் எஸ்.வி.சேகர் முன்பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகும் கைது செய்யப்பட வில்லை; தமிழ்நாட்டின் மதிப்புமிக்க தலைவர்களை தனது திமிர்ப்பேச்சால் அவ்வப்போது 'நஞ்சு கக்கி' தமிழகத்தில் கடும் எதிர்ப்புகளை சந்தித்துவரும் பா.ஜ.க வின் தேசிய செயலாளர் எச்.ராஜா மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பார்ப்பனர் என்றால் அவர்கள் எந்தக் குற்றம் செய்தாலும் தண்டிக்கப்படக்கூடாது என்ற 'மனுகால' சட்டத்தை தமிழக காவல்துறையில் தமிழக அரசும் இவர்களிடம் பின்பற்றாமல் இந்தியத் தண்டனைச் சட்டத்தைப் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

# கழகத்தில் இணைந்தனர்




ஏற்கனவே பத்ரியோடு இணைந்து பெரியார் திராவிடர் கழகத்தில் செயல்பட்ட கரு. அண்ணாமலை, சென்னை மாநாட்டில் கழகத்தில் இணைந்தார். அவரது தலைமையில் இணைந்த தோழர்கள்: க. சுப்பிரமணி, மாசிலா விநாயகம், வீ. பொற்கோவன், மதிவாணன், சிலம்பம் சிவாஜி, கரிகாலன், மதன் குமார், செயசீலன், மணிமொழியன், துரைராஜ், முவேந்தன், கண்ணன், குலசேகரன், மணி பாரதி, க. செல்வம், கவிஞர் மன்னார், சூளை பள்ளம் பெரியார் செல்வம், இராஜசிம்மன், அனகை சிர்த்தான், அருண், இராஜரத்தினம், வீரமணி அம்பேத்கார், தம்பி சேகுவாரா வெங்கடேசு, யமுனா, சட்டக் கல்லூரி மாணவர்கள் அ. அன்பரசன், ப. சுரேஷ்குமார், அம்பேத்கர் துரை, இரா ஜீவ ரத்தினம், அனிதா, மோனிசா, விஜி, மணிமொழியன், குமார், கி. மூர்த்தி மற்றும் அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கத் தலைவர் இல பாண்டியராஜன் தலைமையில் இயங்கும் மன்றத்தின் சங்கர் சுரேஸ், மனோகரன் கார்த்தி, கோபி, திவியராஜ், பக்தசலம், கலை நிதி ஆகியோர் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொது செயலாளர் விடுதலை இராஜேந்திரன் முன்னிலையில் திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைந்தார்கள். இனி அம்பேத்கர் மக்கள் நீதி இயக்கம், திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பு இயக்கமாக செயல்படும்.





*திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும்*

## பெரியார் கைத்தடி – அம்பேத்கர் கண்ணாடி

## ஊர்திப் பேரணி – சமூக நீதி ரதம்

- மே 9 காலை ஈரோட்டில் தொடங்குகிறது
- மே 12 – சென்னை கூடுவாஞ்சேரியில் நிறைவடைகிறது
- சேலம் – காவேரிப்பட்டினம் – வேலூர் – கூடுவாஞ்சேரியில் பொதுக் கூட்டங்கள்
- காலை முதல் மாலை வரை – பறி போகும் தமிழக உரிமைகள் பா.ஜ.க. மதவெறித் திணிப்புகளை எதிர்த்து – பரப்புரை

**பெரியார்–அம்பேத்கர்–காமராசர் – சமூகநீதி ரதம் பேரணியாக வலம் வருகிறது.**

**தமிழர்களே! ஆதரவு தாரீர்!**

# கழகத்தின் பரப்புரைகள் – ஆர்ப்பாட்டங்கள்

## பள்ளிப்பாளையத்தில் ஆசிபாவுக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்

நாமக்கல் மாவட்டம் சார்பில் இந்துத்துவ வெறியர்களால் வன்புணர்ந்து கொல்லப்பட்ட ஆசிஃபாவிற்கு நீதி கேட்டும், இந்துத்துவ பாஜக அரசைக் கண்டித்தும் திராவிடர் விடுதலைக் கழகம், தோழமைக் கட்சிகள் ஒன்றிணைந்து பள்ளிப்பாளையத்தில் 17.4.2018 அன்று மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் மாவட்டப் பொருளாளர் முத்துப்பாண்டி தலைமை வகிக்க, மாவட்ட செயலாளர் சரவணன் முன்னிலையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் கழகம், தமுமுக, பு.இ.மு. தோழர்கள் கண்டன உரைக்குப் பிறகு கழக அமைப்பாளர் ஈரோடு ரத்தினசாமி கண்டன உரையாற்றினார்.

## ஆசிபாவும் தேசத் துரோகியா? சென்னை–மயிலாடுதுறையில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

சிறுமி ஆசிபாவை இந்துத்துவா கும்பல், வன்புணர்ச்சி செய்து படுகொலை செய்ததைக் கண்டித்து சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 20.4.2018 மாலை 4 மணியளவில் சென்னை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அருகே பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதிகார வெறியில் மனிதத்தைக் கொல்லாதே; ஆசிபாவும் தேசத் துரோகியா? பச்சிளங் குழந்தைகளையும் சீரழிக்கும் மதவெறியைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் என்ற தலைப்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இளம் தமிழகம் அமைப்பைச் சார்ந்த செந்தில், குணங்குடி அனிஃபா (மனித நேய மக்கள் கட்சி), சைலேந்திரர் (தமிழர் விடியல் கட்சி), தெகலான் பாகவி (எஸ்.டிபி.அய். தலைவர்), திருமுருகன் காந்தி (மே 17) ஆகியோர் கண்டன உரையாற்றினர். காஞ்சி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் இரவி பாரதி நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் வேழவேந்தன், இரா. உமாபதி, ஏசுகுமார், செந்தில் எஃப்டி.எல்., மயிலை சுகுமார், தலைமை நிலையச் செயலாளர் தபசி. குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் உள்ளிட்ட கழகத் தோழர்களும், திருமூர்த்தி, அருண், ரஜினிகாந்த் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்களும், தமிழ்ப்புலிகள் அமைப்பைச் சார்ந்த நாகை திருவள்ளுவன் உள்ளிட்ட தோழர்களும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். கழகத் தோழர் இரண்யா ஆர்ப்பாட்டத்தில் கண்டன முழக்கங்களை எழுப்பினார்.

**மயிலாடுதுறை :** மயிலாடுதுறையில் ஏப்.16 அன்று ஆசிபா படுகொலையைக் கண்டித்து மயிலாடுதுறை திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் இளையராஜா, மகேசு, செந்தில், நடராஜ், மகாலிங்கம் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளும் பங்கேற்றன.

## தருமபுரி மாவட்ட கலந்துரையாடல்

தருமபுரி மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 24.4.2018 அன்று நடைபெற்றது. ஈரோடு புதிய கிளைகளுக்கான பொறுப்பாளர்கள் மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பிரச்சாரச் செயலாளர் பிரபாகரன் முன்னிலையிலும் தேர்வு செய்யப்பட்டனர். வரும் மே - 9. முதல் 12 வரை நடைபெறும் ஊர்தி பரப்புரைப் பேரணிக்கு சிறப்பாக வரவேற்பு அளிக்க முடிவு செய்யப்பட்டது, பெரியார் முழக்கம், நிமிர்வோம் இதழ்கள் சந்தா சேர்ப்பது; மாதம் ஒரு முறை தோழர்கள் சந்தித்து கலந்துரையாடல் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. 25 தோழர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கீழ்கண்ட புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்: பாப்பிரெட்டிப்பட்டி - சிவக்குமார், அரூர் - பெருமாள், தர்மபுரி - சுதந்திர குமார், பென்னாகரம் - நஞ்சப்பன், காரிமங்கலம் - செந்தில், நல்லம்பள்ளி - இராமதாசு, மாவட்ட மகளிரணி - பரிமளா, மாவட்ட அறிவியல் மன்றம் - வையாபுரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## திருமுடிவாக்கத்தில் பெரியார் சிலை திறப்பு

சென்னையை அடுத்த திருமுடிவாக்கத்தில் அப்பகுதி மக்களின் முயற்சியில் அம்பேத்கர் சிலை நிறுவப்பட்டுள்ளது. அதனையொட்டி 19.4.2018 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

முன்னதாக அம்பேத்கர் சிலைக்கு கழகத் தலைவர் மாலை அணிவித்தார். பொதுக்கூட்டத்தில் காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மகேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்றச் செயலாளர் பாசறை செல்வராசு, தந்தை பெரியார் திராவிடர் கழக குன்றத்தூர் பரந்தாமன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

## நாகர்கோயிலில் அம்பேத்கர் நினைவு நாள் கூட்டம்

அம்பேத்கர் 127 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 14.4.2018 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நாகர்கோவில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பணிமனை முன்பு தெருமுனைப் பரப்புரைக் கூட்டம் வழக்குரைஞர் வே. சதா (மாவட்ட தலைவர்) தலைமையில் நடைபெற்றது. விஷ்ணு வரவேற்புரையாற்றினார். தோழர்கள் உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சவகர், தமிழ் மதி, நீதி அரசர், ஜெயன், சூசையப்பா ஆகியோர் உரையாற்றினர். கூட்டத்தில் மஞ்சுகுமார், சந்தோஸ், இராம சுப்ரமணியன், சுசீலா, சாந்தா உள்ளிட்ட தோழர்கள் கலந்துக்கொண்டனர். அனீஸ் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

## திருச்சியில் அம்பேத்கர் சிலைக்கு ஊர்வலமாகச் சென்று மாலை

அம்பேத்கரின் 127 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ஏப்.14 அன்று காலை 10 மணிக்கு திருச்சியிலுள்ள அவரது சிலைக்கு திருச்சி மாவட்டக் கழகம் சார்பில் ஊர்வலமாகச் சென்று முழக்கமிட்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. வழக்கறிஞர் கென்னடி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மனோகரன் தலைமையில் வழக்கறிஞர் கென்னடி, மணி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சியில் சடங்குகள் இன்றி கழகத் தோழர் இல்லத் திறப்பு

பொள்ளாச்சி ஆனைமலையில் 8.4.2018 அன்று கழகத் தோழர்கள் அனுசுயா-கணேசன் இணையரின் இல்லத் திறப்பு விழா எவ்வித சடங்குகளும் இல்லாமல் நடைபெற்றது. இல்லத்தினை கணவரை இழந்த கழகத் தோழரின் உறவுப் பெண் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அனைவரும் கைதட்டி உற்சாகமாக வரவேற்றனர். மணிமொழி வரவேற்றுப் பேசினார். கழகப் பொறுப்பாளர் பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, "புதுமனை புகு விழா வைதிக முறையில் ஏன் செய்யப்படுகிறது என்பதையும், அதில் நம்மை நாமே இழிவு செய்து கொள்வதையும், சடங்குகள், சாதி, கடவுள் மோசடிகள் குறித்தும் விளக்கினார். தோழர்கள் இசைமதி, வினோதினி, பெண் உரிமைப் பாடல்களைப் பாடினர்.

மடத்துக்குளம் மோகன், 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடத்தி, அறிவுக் கருத்துகளை பாமரருக்கும் புரியும் வகையில் பேசியது அனைவரையும் கவர்ந்தது. இறுதியாக கணேசன் நன்றி கூறினார்.

ஆனைமலை சட்ட எரிப்புப் போராளி ஆறுமுகம், ஆனைமலை கழகத் தோழர்கள் அரிதாசு, ஆனந்த், மணி, விவேக் சமரன், சிவா, முருகேசன் மற்றும் கோவை மாவட்டப் பொறுப்பாளர்கள், நிர்மல்-இசைமதி இணையர், கிருஷ்ணன்-ராஜு இணையர் மற்றும் பல தோழர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் பக்தர்களே பதில் சொல்லுங்கள், இவர்தான் பெரியார், இடஒதுக்கீடு உரிமை, சபாஷ் அம்பேத்கர் நூல்கள் வழங்கப்பட்டன.

கழக வளர்ச்சிக்கு ரூ.500 நன்கொடை வழங்கப் பட்டது.

## தியாகி இம்மானுவேல் பேரவைச் செயலாளர் சந்திரபோசு இல்ல ஜாதி மறுப்பு மண விழாக்கள்



21-4-2018 சனிக்கிழமை அன்று காலை 10-00 மணிக்கு, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, லேனா மகாலில், தியாகி இமானுவேல் பேரவைப் பொதுச் செயலாளர் சந்திரபோசு-சரசுவதி இணையரின் மகன்களான ச.ச.அனீசு குமார், அம்பேத்ராஜ் ஆகியோருக்கு, ஜாதி, சடங்கு, தாலி மறுப்பு சுயமரியாதை வாழ்க்கை இணையேற்பு விழா கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த உறுதிமொழிகளைக் கூறிட, ஆணவக் கொலையில் தனது இணையர் சங்கரைப் பறிகொடுத்த உடுமலை கவுசல்யா மாலைகளை எடுத்துக் கொடுக்க நடந்தேறியது. விழாவின் சிறப்பாக - திருமண முறை, பெண்ணுரிமை, ஜாதியொழிப்பு குறித்த கட்டுரைகள் அடங்கிய 'தமிழ்த்தேசிய விடுதலைக்கான வாழ்வியல் பண்பாடு' எனும் நூல் வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய முன்னணி பொழிலன், தமிழ்த்தேச விடுதலை முன்னணி மீ.த.பாண்டியன், கிருஷ்ணஜோதி ஆகியோர் இணையேற்பு விழா விளக்கவுரையாற்றினர். விழாவினை தியாகி இமானுவேல் பேரவையின் இளைஞரணிச் செயலாளர் புலி.பாண்டியன் தொகுத்து வழங்கினார். பல்வேறு அரசியல், சமூக, தமிழ்த் தேசிய அமைப்பினர் மிகப்பெருமளவில் கலந்து சிறப்பித்தனர். பட்டியலினத்தின் மூன்று பெரும் உட்பிரிவுகளுக்குள் நடந்தேறிய இவ்விணையேற்பு அனைத்து தரப்பினருக்கும் வழிகாட்டும் சிறப்புடையது என பலரும் போற்றி மகிழ்ந்தனர். மண விழா மகிழ்வாக கழக வார ஏட்டிற்கு ரூ.2000 வழங்கினர்.

## திருப்பூரில் எழுச்சியுடன் அம்பேத்கர் பிறந்த நாள் பொதுக்கூட்டம்

திருப்பூரில் புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் 22.04.2018 ஞாயிறு அன்று மாலை 6 மணியளவில்ஜீவா நகர், ரங்கநாதபுரத்தில் நடைபெற்றது. சு.பிரசாத் தலைமை தாங்கினார். தோழர்கள் சரத், பவித்ரா, ஜெயா, இந்துமதி, சரசம்மா,சூர்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சின்னு வரவேற்புரையாற்றினார்.

முதல் நிகழ்வாக 'கியோ குசின்' தற்காப்புக்கலை தோழர்களால் தற்காப்பு கலை நிகழ்ச்சி நிகழ்த்திக் காட்டப்பட்டது. பகுத்தறிவுப் பாடல்களை யாழினி, யாழிசை, இசைமதி ஆகியோர் பாடினர். காவை இளவரசன் 'மந்திரமா? தந்திரமா?' அறிவியல் விளக்க நிகழ்ச்சி பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர்கள் கனல் மதி, தேன்மொழி, பிரசாந்த் உரையைத் தொடர்ந்து, தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி நகைச்சுவையாக பகுத்தறிவுக் கருத்துக்களுடன் உரையாற்றினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுக்கூட்டத்திற்கு உழைத்த தோழர்களுக்கு புத்தகங்களை பரிசளித்து, புரட்சியாளர் அம்பேத்கர்




பணி குறித்து சிறப்புரையாற்றினார். நகுலன் நன்றியுரையுடன் பொதுக்கூட்டம் நிறைவடைந்தது.

பொதுக் கூட்டத்திற்கு முன் பேராசிரியர் சுபவீ "வானியலும்,ஜோதிடமும்" எனும் குறுவட்டு அப்பகுதியில் ஒலிபரப்பப்பட்டது. சுமார் 50 ஜோதிடர்கள் வாழும் அப்பகுதியில் பொதுமக்களிடையே பேராசிரியர் சுபவீ ஜோதிடம் குறித்த இந்த ஆய்வுரை நன்கு சென்று சேர்ந்து மிகுந்த வரவேற்பையும் பெற்றது. பொதுமக்களில் பலர் நேரில் வந்திருந்து பாராட்டுக்களை தெரிவித்துச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# களப் போராளி பத்ரியின் நினைவுச் சுவடுகள்' நூல் வெளியீடு





(முதல் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஆனூர் ஜெகதீசன் வெளியிட்டார். அவர் தனது உரையில் "இராயப்பேட்டை பகுதி எப்போதும் பெரும் எண்ணிக்கையில் குடும்பம் குடும்பமாக பெரியார் தொண்டர்களைக் கொண்ட கழகத்தின் கோட்டையாக இருந்து வருகிறது என்றால் அதற்குக் காரணம் பத்ரி தான்" என்று குறிப்பிட்டார். நூலை ஆனூர் ஜெகதீசன் வெளியிட, பத்ரியின் துணைவியார் சுதா பெற்றுக் கொண்ட காட்சி உருக்கமாக இருந்தது.

### ஜாதி மறுப்புத் திருமணம்

காஞ்சிபுரம் மாவட்டம் கூவத்தூர் பாலன்-பானுமதி ஆகியோரின் மகன் திலீப்குமாருக்கும் - காஞ்சிபுரம் மாவட்டம் முகையூர் பர்குணன்-உமாமகேஷ்வரி ஆகியோரின் மகள் அர்ச்சனாவுக்கும் ஜாதி மறுப்புத் திருமணத்தை தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் மாநாட்டு மேடையில் நடத்தி வைத்தார். கூட்டத்தினர் "ஜாதி ஒழிப்புத் திருமணங்கள் பெருகட்டும்; ஜாதி ஒழிப்புக் கொள்கையை வென்றெடுப்போம்" என்று முழக்கமிட்டனர். தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மாநாட்டுத் தீர்மானங்களை முன் மொழிந்தார். கூட்டத்தினர் பலத்த கரவொலி எழுப்பி, தீர்மானங்களை வழி மொழிந்தனர். தொடர்ந்து பேசுகையில் இந்த மேடையில் பெரியார் படத்துடன் அம்பேத்கர் படத்தை இணைத்திருப்பது ஏன் என்பதை விளக்கினார்.

அரசியல் வரைவுக் குழுத் தலைவராக இருந்த அம்பேத்கர், அதற்குப் பிறகு 'மொழி வழி மாநிலங்கள் குறித்த சிந்தனை' என்ற தமது நூலில் இந்தியாவில் வடநாடு, தென்னாடு முரண்பாடுகள் கூர்மையடைந்திருப்பதை சுட்டிக் காட்டினார். "இந்தியாவில் இந்தி பேசும் பெரும்பான்மை மக்களை ஒன்றாக்கிவிட்டு, தென்னாட்டு மக்களை சிதறடித்து விட்டார்கள். தென்னாடு வடநாட்டு அதிகாரத்தை எப்படி சகித்துக் கொள்ள முடியும்?" என்று அம்பேத்கர் குறிப்பிட்டிருப்பதை எடுத்துக் காட்டினார். இந்தி மொழிக் குறித்து அரசியல் நிர்ணய சபையில் காங்கிரசுக்குள் வடநாடு, தென்னாடு பிரிவு தலைதூக்கி நின்றதை நூலில் சுட்டிக்காட்டிய அம்பேத்கர், வடநாடு தென்னாட்டுக்கான வேறுபாடுகளையும் எடுத்துக் காட்டினார்.

"வடக்கிற்கும் தெற்கிற்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. வடக்கு பிற்போக்கானது - தெற்கு முற்போக்கானது; வடக்கு மூடநம்பிக்கைகளில் மூழ்கிக் கிடப்பது - தெற்கு பகுத்தறிவு சிந்தனைக் கொண்டது; கல்வியில் தெற்கு முன்னேறிச் செல்வது - வடக்கு பின் தங்கிக் கிடப்பது; தெற்கின் கலாச்சாரம் நவீனமானது - வடக்கின் கலாச்சாரம் பழமையானது" என்று குறிப்பிட்டதை எடுத்துக் காட்டினார். 'பசு மாட்டுப் பிரதேசங்கள்' என்று அழைக்கப்படும் பழமையில் மூழ்கிக் கிடக்கும் வடமாநிலங்களின் பார்ப்பனிய மதவெறிக் கொள்கைகளைக் கொண்ட பா.ஜ.க. தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது. தென்னகம் முழுமையிலும் இந்த வடநாட்டு எதிர்ப்புக்குரல் வலுத்து வருகின்றன. 'திராவிட நாடு வேண்டும்' என்ற கோரிக்கை கேரளாவிலும்; 'சுயாட்சி வேண்டும்' என்றக் குரலை கருநாடக முதல்வரும், ஆந்திரா, தெலுங்கானா முதல்வர்கள், தங்களின் மாநில தனித்துவ உரிமை களுக்காகவும் குரல் கொடுத்து வருகிறார்கள். இதுவரை இந்திய ஒற்றுமையைப் பேசி வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆளும் கேரள மாநிலத்தில் அதன் நிதியமைச்சர் தென்னக மாநிலங்களின் நிதி அமைச்சர் மாநாட்டைக் கூட்டி விவாதிக்கிறார். இந்த நிலையில் தன்னுரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் தென் மாநிலங்களுக்கு வழிகாட்டும் வரலாற்றுப் பின்புலம் கொண்ட ஒரே நாடு தமிழ்நாடுதான். தன்னுரிமை இலட்சியத்தை உயர்த்திப் பிடிப்போம்" என்று தனது உரையில் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

தொடர்ந்துபேசிய மே 17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி - காவிரிப் பிரச்சினைக் குறித்து விரிவான தகவல்களை முன் வைத்தார். 370 டி.எம்.சி. காவிரி நீரைப் பெற்று வந்த தமிழகம், படிப்படியாகக் குறைக்கப்பட்டு, குறைக்கப்பட்ட நீரும் தமிழகம் வந்தடையாமல் தடுக்கப்படுவதையும் காவிரிப் படுகையை பன்னாட்டு கம்பெனிகளின் சுரண்டல் தொழிலுக்கு தாரை வார்க்கும் சதி இதில் அடங்கியிருப்பதையும் விரிவாக விளக்கினார்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'நீட் திணிப்பு' என்ற தலைப்பில் உரையாற்றினார். 'நீட்' திணிப்பால் தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வியில் கிராமப்புற மாணவர்கள் நுழைய முடியாமல் தடுக்கப்பட்டதைப் புள்ளி விவரங்களுடன் விளக்கினார். தமிழ்நாட்டில் 85 சதவீதம் மாநிலக் கல்விப் பாடத் திட்டத்தில் மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களுக்கு நகர்ப்புற மேல்தட்டு வர்க்கத்தினரான 15 சதவீதம் பேர் மட்டுமே படிக்கும் சி.பி.எஸ்.ஈ. பாடத் திட்டத்தில் நீட் தேர்வை நடத்துவது என்ன நியாயம் என்று கேட்டார். அகில இந்திய அடிப்படையில் ஒரே மாதிரியான தேர்வு நடத்துகிறோம் என்று அதற்கு நியாயம் கற்பிப்பவர்கள் ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனியான வினாத்தாள்களை சில மாநிலங்களுக்கு எளிமையாகவும் சில மாநிலங்களுக்கு கடுமையாகவும் தயாரிப்பது ஏன்? என்று கேட்டதோடு, தேர்வுகளில் நடக்கும் முறைகேடுகளையும் சுட்டிக் காட்டினார். நீட் தேர்வு தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் எப்படி நடந்து கொண்டது என்பதையும் அவர் விளக்கினார்.

"நீட் தேர்வை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வந்த வழக்கில் 2013 ஜூலை 18 அன்று தீர்ப்பு வந்தது. அப்போது தலைமை நீதிபதியாக இருந்த அல்டாமஸ் கபீர் மற்றும் விக்ரம் ஜித் சென் என்ற இரண்டு நீதிபதிகள், நீட் தேர்வை நடத்தும் உரிமை இந்திய மருத்துவ கவுன்சிலுக்குக் கிடையாது என்று தீர்ப்பளித்தனர். அமர்வில் இடம் பெற்றிருந்த மற்றொரு நீதிபதி அனில் ஆர் தவே மட்டும் 'நீட்'டுக்கு ஆதரவாக தீர்ப்பளித்தார். பெரும்பான்மை தீர்ப்பு 'நீட்'டுக்கு எதிராக இருந்த நிலையில், மருத்துவ கவுன்சில் தீர்ப்புக்கு எதிராக மறு சீராய்வு மனு ஒன்றை 2013 அக்டோபர் 13ஆம் நாள் தாக்கல் செய்தது. இந்த சீராய்வு மனு மூன்றாண்டுகள் 2016 வரை அப்படியே கிடப்பில் போடப்பட்டது. நீட் தேர்வுக்கு எதிராக தீர்ப்பளித்த தலைமை நீதிபதி அல்டாமஸ் கபீர் மற்றும் விக்ரம் ஜித் சென் ஆகியோர் பதவி ஓய்வு பெறும் வரை இது திட்டமிட்டு கிடப்பில் போடப்பட்டிருந்தது. அல்டாமஸ் கபீர் பதவி ஓய்வு பெறும் கடைசி நாளான 2016 ஏப்ரல் 11இல் உச்சநீதிமன்றத்தில் அமர்வு 2013ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் நீட்டுக்கு எதிராக வழங்கிய தீர்ப்பை இரத்து செய்தது. அப்போது நீட்டுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கிய அதே நீதிபதி அனில் ஆர் தவே தலைமையில் அமைந்த அமர்வு இப்போது சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்து நீட் தேர்வை நியாயப்படுத்தி திணித்தது.

மாநில ஆட்சிகளின் கருத்துகளைக் கேட்டு ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று முதல் நான் கூறிய நீதிபதி அனில் தவே, பிறகு மாநிலங்களின் கருத்துகளைக் கேட்காமலேயே அடுத்த நாள் 'நீட்'டை திணித்தார் என்று விளக்கினார் கொளத்தூர் மணி. தொடர்ந்து, வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை உச்சநீதிமன்றம் நீர்த்துப் போகச் செய்ததையும் சுட்டிக்காட்டி, பெரியார் தனது இறுதி உரையில் முன்மொழிந்த தமிழ்நாட்டு விடுதலை முழக்கத்தை முன்னெடுப்போம் என்று வலியுறுத்தினார்.

மாநாட்டுக்கு விழுப்புரம், கடலூர், வேலூர், குடியாத்தம், புதுவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தோழர்கள் திரண்டு வந்தனர். பல்வேறு இயக்கங்கள் அமைப்புகளைச் சார்ந்த இளைஞர்கள், பொது மக்ககள் பெரும் திரளாகக் கூடி இறுதி வரை மாநாட்டுக் கருத்துகளைக் கேட்டனர்.

**– நமது செய்தியாளர்**


**'நிமிர்வோம்' –**

**ஏப்ரல் 2018 இதழ்**

- ஐ.பி.எல்.லுக்கு தமிழ்நாட்டில் தடை கேட்டது தவறா?
- ஊழல் புகாரில் உச்சநீதிமன்றம்.
- நிதி ஒதுக்கீட்டில் தென்னகம் வஞ்சிப்பு.
- பெரியார்-உ.வே.சா. சந்திப்பும்-சொல்லாடலும்
- பா.ஜ.க.வின் பாலியல் குற்றங்கள்: விரிவான தொகுப்பு
- வரலாற்றில் வலங்கை-இடங்கை ஜாதி மோதல்கள்
- அம்பேத்கர் தந்த எச்சரிக்கை




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 4th May 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN